Date : 27.01.2026

SC.No. : 255/2024

PW : 2

Name : **முத்துப்பாண்டி**

Calling :

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்குவிசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

**(வழக்கின் எதிரி ஆஜர் )**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :

1. அ.சா.3 ராஜாராம் என்பவருக்கு எனது தங்கையை திருமணம் செய்துகொடுத்துள்ளோம் என்றால் சரிதான். பட்டியல் சாட்சி 5 முருகன் என்பவருக்கு எனது தங்கையை திருமணம் செய்து கொடுதுள்ளோம் என்றால் சரிதான், அவர் எனது தாய்மாமன் மகன் ஆவார். பட்டியல் சாட்சி 6 சிவா பட்டியல் சாட்சி 5 முருகன் என்பவரின் உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். பட்டியல் சாட்சி 7 ராஜேந்திரன் எனக்கு மாமா முறை ஆவார். பட்டியல் சாட்சி 8 ராஜாங்கம் தாத்தா ஆவார். பட்டியல்சாட்சி 10 பாண்டி எனது அம்மாவின் உடன் பிறந்த சகோதரர் ஆவார். பட்டியல் சாட்சி 11 கருப்புச்சாமி எனக்கு பெரியப்பா முறை ஆவார். போலிசார் என்னை எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் ஒரு முறை விசாரித்தார்கள்.

2. எத்தனை நாட்கள் கழித்து எனக்கு மயக்கம் தெளிந்தது என்றால் சுமார் ஒரு வாரம் கழித்து தான் மயக்கம் தெளிந்தது. போலிசார் விசாரணையில் எதிரி செல்லம் என்னை அருவாளால் இடது காலில் வெட்டினார் என்ற விபரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் மானாமதுரை - பெரம்பலூர் தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு சிப்காட் போலிசார் எத்தனை பேர் வந்தார்கள் என்றால் சுமார் 4, 5 பேர்கள் வந்தார்கள். போலிசார் விசாரணையில் என்னுடைய ரத்தம் பட்ட ஆடைகளை ஒப்படைத்தேனா என்றால் ஒப்படைத்தேன்.

3. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் மானாமதுரை - பெரம்பலூர் தேசிய நெடுஞ்சாலையில் அடிக்கடி அதிக வாகனங்கள் செல்வது

வழக்கம் என்றால் சரிதான். மக்கள் நடமாட்டம் இருக்கும் என்றால் சரிதான். என் மீது மானாமதுரை சிப்காட் காவல்நிலையத்தில் குற்ற வழக்கு நிலுவையில் உள்ளதா என்றால் ஒரு வழக்கு உள்ளது. போலிசார் விசாரணையில் எதிரி அழகுசுந்தரம் எனது இடதுகை மணிக்கட்டு சுண்டுவிரலில் வெட்டினார் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

4. அரசு தரப்பு பொருட்சான்றுகளான அருவாள் மற்றும் பட்டாகத்தி ஆகியவை வழக்கிற்காக காவல்நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. போலிசார் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்த போது பட்டாகத்தி மற்றும் அருவாளை காண்பித்தார்களா என்றால் இல்லை. எதிரி வைரமணி என்பவர் எனக்கு உறவினர் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் பண்ணைக்கருப்பையா மகள் திருமணம் சிவகங்கை சிவன் கோவிலில் நடைபெற்றது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்சொன்ன விபரம் எனக்கு தெரியும் என்றும் வழக்கிற்காக தெரியாது என பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

5. இந்த திருமணத்தில் எதிரிகள் வைரமணியும், முத்துச்சாமியும் கலந்துகொண்டார்கள் என்றும் சம்பவம் நடந்ததாக சொல்லும் தேதியில் சிவகங்கை சிவன் கோவிலில் தான் இருந்தார்கள் என்றால் சரியல்ல. சம்பவயிடத்திலிருந்து உருளி பேருந்து நிறுத்தம் எந்த திசையில் உள்ளது என்றால் இடதுபுறம் கிழக்கு மேற்காக உள்ளது. உருளி பேருந்து நிறுத்தத்தில் மக்கள் போக்குவரத்து அதிகமாக இருக்கும் என்றால் சரியல்ல. எத்தனை நாட்கள் கழித்து என்னை மருத்துவர் காயம் சம்மந்தமாக கேட்டார் என்றால் ஒரு வாரம் கழித்து தான் கேட்டார். சொன்ன நாள் சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் வைத்து இந்த எதிரிகளால் எனக்கு எந்த சம்பவம் நடைபெறவில்லை என்றும் இருசக்கரவாகனத்தில் மூவர் பயணம் செய்து கரடுமுரடான சாலையில் கீழே விழுந்து அதில் உள்ள கூர்மையான கற்கள் பட்டு கிழித்து எனக்கும் அ.சா.3 ராஜராமுக்கும் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

6. என் மீது திருட்டு , சாராயம் சம்மந்தமான வழக்குகள் சிப்காட் மற்றும் சிவகங்கை தாலுகா காவல்நிலையத்தில் நிலுவையில் உள்ளது என்றால்

இல்லை. அ.சா.3 ராஜராம் மீது இந்த நீதிமன்றத்தில் இதச பிரிவு 307 ன் கீழ் பதியப்பட்ட வழக்கில் தண்டனை பெற்றுள்ளார் என்றால் வழக்கு நடந்தது தெரியும் இந்த நீதிமன்றமா என்று எனக்கு தெரியாது. முதல் விசாரணையில் சொன்னது போல் எதிரிகளால் எனக்கு சொன்ன நாள், சொன்ன தேதியில் காயங்கள் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**: இல்லை

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.01.27 10:48:24 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர்,**

**சிவகங்கை.**